RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s213

# மார்க்கண்டேயப் படலம் காட்டும் ஆசிரம நெறிகள்

**க. பவித்ரா [அ, *], சு. பரணி [அ]**

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா.

# The Ashram Life Duties in Margandeya Padalam

**K. Pavithra [a, *], S. Bharani [a]**

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science & Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: pavikaruna23@gmail.com

Received: 22-03-2021
Revised: 06-01-2022
Accepted: 11-01-2022
Published: 28-02-2022

Check for updates

## ABSTRACT

This article discusses about the life duties of a human being through Margandeya padalam from Kandhapuranam. In the everyday life People sets goals to achieve or complete their duties and growing themselves day by day. They create their own daily plans and moving on to the next part of their lives. Our ancestors classified this life into Ashram parts and also emphasized to live in those ways. They also named it as the duties of a human being. The purpose of this article is to make people to know about these life duties and make them to follow it in their lives.

**Keywords:** Duties of Andanar, The marriage Life - Ascetic Life, Specialities of Penance, Spiritual Freedom

## முன்னுரை

கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணத்தின் இரண்டாம் காண்டமான அசுர காண்டத்தில் இடம்பெறும் மார்க்கண்டேயப் படலம் பல வாழ்வியற் கூறுகளை தன்னகத்தே கொண்டதாக அமைந்துள்ளது. மார்க்கண்டேய முனிவரின் வரலாற்றினைக் கூறும் இப்படலம் மனிதர்கள் கடைபிடிக்க வேண்டிய நால்வகைக் கடமைகளையும் வாழ்க்கை முறையினையும் தெளிவுறக் கூறுகிறது.

## அந்தணர் சொல் விளக்கம்

சங்க இலக்கியங்கள் முதற்கொண்டு பல தமிழிலக்கியங்களில் அந்தணர் பற்றிய செய்திகள் அறியக் கிடைக்கின்றன. பிராம்மணர் என்னும் சொல்லின் பரியாயச் சொற்களாக அந்தணர், பார்ப்பார் மற்றும் மறையவர் ஆகிய சொற்களை மேலும், தூதுவர், புரோகிதர், துறவியர், இல்லறத்தார், வைசியர், அறக்களத்தோர் போன்றோரையும் பலவகை நிலைப் பிராமணராகக் கொள்கிறார் (Subramaniyan, 2007). திருவள்ளுவர்,

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

என, எல்லா உயிரிடத்தும் செம்மையான அருளை மேற்கொண்டொழுகும் அறவோர்களை அந்தணர் என இலக்கியங்களும் வேதங்களும் எடுத்துரைக்கின்றன (Parimelalhagar, 2002).

## நான்கு ஆசிரம நெறிகள்


மனிதர்கள் தங்கள் வாழ்நாளில் நான்கு வகையான வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றி வாழத் தலைப்பட்டவர்கள் (Subramanyan, 1986). அந்தணர்களும் அந்நான்கு ஆசிரம நெறிகளின் அடிப்படையிலேயே தங்கள் வாழ்வை மேற்கொண்டிருந்தனர். இச்செய்தியினை மார்க்கண்டேயப் படலத்தில் குச்சக முனிவர் தன் மகன் கவுச்சிக முனிவரிடம் தெரிவிக்கிறார்.

அளப்பரு மறைகள் ஆதி அறைந்தன யாவ ரேனும்

தளத்தகு பரிசும் அன்றால் சால்புடை அந்த ணாளர்

கொளப்படு கடனே யாகும் நாற்பெரும் கூற்(று) அ(து) அன்றே

என, வேதங்கள் முதலாக சொல்லப்படும் நூல்களில் அந்தணர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்க செயல்கள் கூறப்பட்டிருக்கிறது என்றும், அது நான்கு பெரும் பிரிவுகளை உடையது என்றும் கூறுகிறார் (Sanmugasundaram , 2019). அவை,




உனற்(கு) அரும் பிரமம் தன்னில் ஒழுகல்இல் லறத்தில் நிற்றல்

வனத்திடைச் சேறல் பின்னர் மாதவத் துறவில் வாழ்தல்

என்னும் பாடலடிகள் அந்நால்வகை நெறிகளைக் கூறுகிறது (Sanmugasundaram , 2019).

## பிரமசரியம் (கல்வி கற்றல்)

கிரகஸ்தம் என்னும் இல்லற வாழ்விற்கு முன்புள்ள பகுதி பிரமசரியம் என சுட்டப்படுகிறது. உபநயனத்திற்குப் பிறகு குருகுலத்தில் கல்வி கற்கச் செல்லும் மனிதன் மனுதர்மம் கூறும் நெறிகளை கடைபிடித்து தன் பிரமசரிய விரதத்தை முடித்து இல்வாழ்வினுள் நுழைகிறான். கவுச்சிக முனிவர் பிரமசரியத்தை கடைபிடித்து வாழ்ந்தார் என்பதை ‘அவற்றின் ஆதி இயற்றினை’ என்னும் குச்சகர் வாக்கால் அறியலாம் (Sanmugasundaram , 2019).

அந்தணர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பூணூல் அணிவிக்கும் விழாவினை உபநயனம் என அழைத்தனர். இவ்வாறு, உபநயனம் செய்விக்கப்பட்ட சிறுவன் பிரம்மச்சாரி என அழைக்கப்படுகிறான்.[4] மார்க்கண்டேயப் படலத்தில் கவுச்சிக முனிவருக்கு ஆறு வயதிலும் (2153), மிருகண்டு முனிவர் மருத்துவதி இணையருக்குப் பிறக்கும் மார்க்கண்டேயருக்கு ஐந்து வயதிலும் (2175) உபநயனம் செய்து பிரமசரிய வாழ்வை தொடங்கி வைத்தனர் என்பதை அறிய முடிகிறது.

## கிரகஸ்தம் (இல்லறம்)

பிரமசரிய கடமையை முடித்து நல்லறமான இல்லறத்தினுள் நுழைவதே கிரகஸ்தமாகும். இல்லறத்தின் மேன்மையையும், தேவையையும் மார்க்கண்டேயப் படலம் உணர்த்துகிறது. இல்லறத்தின் அவசியத்தை குச்சகர்,

புலத்தியன் போலும் மேலோய் பொருவின் மங்கலம்சேர் பொன்னின்

களத்தியல் வதுவை பூண்டோர் கன்னியைக் கலத்தல் செய்து

குலத்தியல் மரபின் ஓம்பக் குமரரைப் பயந்தே அன்றோ

நலத்தியல் தவத்தை ஆற்றி நண்ணரும் கதியில் சேரல்

என்கிறார் (Sanmugasundaram, 2019). ஒப்பற்ற திருமண வாழ்வை மேற்கொண்டு மக்களைப் பெற்றெடுத்த பின்னரே நன்மை தரும் தவத்தை செய்து வீடுபேற்றினை அடைய முடியும் என எடுத்துரைக்கிறார்.

முன்னோர்களின் துன்பத்தை நீக்கி நரகம் சேர்வதை தடுக்கும் பொருட்டும், மரபினைக் காக்க பிள்ளைகளைப் பெறும் பொருட்டும் இல்லறத்தை மேற்கொள்ள வேண்டும் என,

மன்பதை உலக மேபோல் மாலுறா மயங்கு காம

இன்பநீ நுகர்தற் கேயோ இசைத்தனன் இறந்த மேலோர்

துன்பமும் நிரயம் சேர்வும் துடைத்திடும் தொன்மை நோக்கி

அன்புறு புதல்வர்க் காக அரிவையைக் கோடி ஐயா

என்றுரைக்கிறார் (Sanmugasundaram, 2019). இல்லறத்தின் மேன்மையினை பத்தொன்பது பாடல்களில் (2017-2035) விரிவாக விளக்குகிறார்.

இல்லறத்தின் பயனை முழுமையாக அடைய கணவன்-மனைவியரிடையே ஒற்றுமையும், மனப்புரிதலும் தேவையாகும். தகுந்த மணப்பெண்ணைத் தேர்வு செய்வது, ஒளியுடைய பொன் அணியின் நடுவே பதிக்க ஒப்பற்ற மணியை தேர்வு செய்வது போன்றதாகும். இதனை,

திருத்த கும்சுடர் மலிதரும் செம்பொனில் செய்ததோர் அணிநாப்பண்

அருத்தி சேர்தரக் குயிற்றிட வேண்டியோர் அருமணி தனைக்கொள்வான்

கருத்தில் உன்னுபு தெரிபவன் போல்ஒரு கன்னியைத் தேர்கின்றான்

என்னும் பாடலடிகளால் அறியலாம் (Sanmugasundaram, 2019). அவ்வாறு தேர்ந்தெடுத்து மணமுடிக்க கவுச்சிக முனிவர் தன் தந்தையிடம் சில தகுதிகளை முன் வைக்கிறார். மணம் செய்ய தகுதியற்ற பெண்களாக, தாய் தந்தையை இழந்தோர், உடன்பிறந்தோர் மற்றும் சுற்றமற்றவர், உடல் ஊனமுற்றவர், நோய் உடையவர், தகுந்த குலத்தில் பிறக்காதோர், காம இன்பம் அதிகமுடையோர், இறைவனை மதித்து வழிபடாதோர் முதலிய தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட தன்மையுடைய பெண்டிரைக் கூறுகின்றார். 2044வது பாடல் முதல் 2056வது பாடல் வரை பன்னிரெண்டு செய்யுட்களில் குளகம் என்னும் யாப்பமைவில் கச்சியப்ப சிவாச்சாரியார் இக்கருத்துகளை கோர்வையாகப் பதிவு செய்துள்ளார். இச்செய்திகள் அக்கால மக்களின் இல்லறத்தின் மீதான பார்வையைக் காட்டுகிறது.

இல்லறத்தின் பயன்களில் ஒன்றான குழந்தைச் செல்வம் பற்றியும் மார்க்கண்டேயப் படலம் எடுத்துரைக்கிறது. குழந்தைப் பேறு ஒருவருக்கு மிகச் சிறந்த செல்வம் என்பதை,

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த

மக்கட்பேறு அல்ல பிற

என்னும் குறளால் அறியலாம். குழந்தைச் செல்வம் வேண்டி இன்றும் மக்கள் வழிபாடு நடத்துவதும், சடங்குகள் செய்வதும் வழக்கத்தில் உள்ளது. மிருகண்டு முனிவர் மகப்பேறு இன்மையால் துன்புற்று 'அனாமயம்' எனும் தன் தவ வனத்தை நீங்கி மனைவியுடனும், தன் சுற்றத்தாருடனும் காசிக்குச் செல்கிறார். இதனை,

இருந்தனன் அநாமயம் என்னும் பேரொடு

பொருந்திய வனத்திடைப் புதல்வர் இன்றியே

வருந்தினன் தமரொடும் மாது தன்னொடும்

அருந்தவன் காசியை அடைதல் மேயினான்

என்னும் பாடலினால் அறியலாம் (Sanmugasundaram, 2019). காசியில் தவம் செய்யும்போது இறைவன் காட்சியளித்து, 'நல்லறிவற்ற, ஊனமான, நூறு வயது வரை வாழும் பிள்ளை வேண்டுமா? அல்லது பண்பான, அறிவான, அழகான, பதினாறு வயதே வாழும் குழந்தை வேண்டுமா?' எனக் கேட்க,

ஆண்டவை குறுகி னாலும் அறிவுள னாகி யாக்கைக்கு

ஈண்டொரு தவறு மின்றி எம்பிரான் நின்பா லன்பு

பூண்டதோர் புதல்வன் தானே வேண்டினன் புரிக என்றான்

என்று இறைவன்பால் அன்புடைய குழந்தை வேண்டும் என மிருகண்டு முனிவர் பதிலுரைக்கிறார் (Sanmugasundaram, 2019).

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்

பண்புடை மக்கள் பெறின்

என திருவள்ளுவர் உரைத்திருப்பதை இங்கு ஒப்பு நோக்கலாம். மிருகண்டு முனிவர் தன் பிள்ளையான மார்க்கண்டேயருக்கு பருவத்தில் செய்ய வேண்டிய சடங்குகளை முறையாகச் செய்து பக்குவமாய் வளர்க்கிறார். குழந்தை பிறக்கும் நான்காம் மாதத்தில் உபநிட்டானம் என்னும் சடங்கினையும், முதல் வயதில் சௌளம் என்னும் சடங்கினையும், இரண்டாம் ஆண்டில் கர்ண வேதனத்தையும் நடத்தினர் என்ற செய்தியினை,

மறுப்படாத் திங்கள் போல வளர்தலும் மதியம் தோறும்

உறுப்புடை உபநிட் டானம் ஓதனம் பிறவும் முற்ற

நெறிப்படு மோரி யாண்டின் நெடுஞ்சிகை வினையும் ஆற்றிச்

சிறப்புடை இரண்டாம் ஆண்டிற் செவிநெறி புரிதலுற்றான்

என்னும் பாடலினால் அறியலாம் (Sanmugasundaram , 2019). மக்கட் செல்வத்தைப் பெறுவதும், அவர்களை நன்முறையில் வளர்ப்பதும் கிரகஸ்த தர்மத்தின் முக்கியமான கடமையாக அமைகின்றது என்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

## வானப்பிரஸ்தமும் சந்நியாசமும்

வானப்பிரஸ்தமும் சந்நியாச தர்மமும் இல்லறத்திற்குப் பிறகு கடைப்பிடிக்கப்படும் துறவு வாழ்க்கையாகும். இரண்டும் துறவு நிலையாக அமைந்தாலும் சிறு வேறுபாடினால் இரண்டும் தனித்தனியே கூறப்படுகிறது. கணவனும் மனைவியும் சேர்ந்து காட்டிற்குச் சென்று தவ வாழ்வினை வாழ்தல் வானப்பிரஸ்தம் என்றும், ஆண்மகன் அனைத்தையும் துறந்து முக்தி நிலையடைய தவம் செய்தலை சந்நியாச தர்மமாகவும் அறியப்படுகிறது. துறவறம் பற்றி தொல்காப்பியர்,

காமம் சான்ற கடைக்கோட் காலை

ஏமம் சான்ற மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்

சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே

என, இல்லறத்தை மேற்கொண்ட தலைவனும் தலைவியும் சிற்றின்பத்தில் நாட்டமில்லாத முதுமைப் பருவத்தில் மக்கட்செல்வமும் உறவினரும் கூடியிருக்க, பேரின்பத்தை அடைய நன்னெறியைப் பின்பற்றி வாழ்தலே இல்லறத்தின் பயன் என்கிறார் (Thirugnanasambandam, 2018).

தொல்காப்பியத்தின் அக இலக்கணத்தை அடியொற்றி எழுந்த நம்பியகப்பொருள் இதை சற்று வேறுபடுத்திக் கூறுகிறது (Thirugnanasambandam, 2010).

மக்களொடு மகிழ்ந்து மனையறம் காத்து

மிக்க காம வேட்கை தீர்ந்துழித்

தலைவனும் தலைவியும் தம்பதி நீங்கித்

தொலைவுஇல் சுற்றமொடு துறவறம் காப்ப

என்கிறது. இந்நூற்பா வானப்பிரஸ்தம் என்னும் கடமையைக் குறிப்பதைக் காணலாம். கந்தபுராணத்தில் அமைந்துள்ள மார்க்கண்டேயப் படலம் கணவன் மனைவியாய் வானப்பிரஸ்தம் செல்லுதலைக் குறிப்பிடவில்லை. ஆனால், குச்சக முனிவர் துறவறம் செல்லும் செய்தியினை,

கருணைசெய் குச்சகன் கண்டு மாதவம்

புரிதர வேவட புலத்தில் போயினான் (Kayilai maamani Sanmugasundaram, 2019)

எனவும், கவுச்சிக முனிவர் தன் மகன் மிருகண்டு முனிவருக்கு உபநயனச் சடங்கு நிகழ்த்தியதும், தன் தந்தையைப் போலவே தவம் செய்யச் செல்லுதலை,

அப்புதல் வற்குஆண்(டு) ஆறு சென்றுழி

மெய்ப்பிர மச்செயல் விளங்கு பான்மையால்

முப்புரி நூல்வினை முடித்துத் தாதைபோல்

செப்பரு மாதவம் செய்யப் போயினான்

எனவும் குறிப்பிடுகிறது (Sanmugasundaram, 2019).

## தவச்சிறப்பு

தவத்தினை அடிப்படையாகக் கொண்டதே சந்நியாச தர்மமாகும். எனவே தவத்தின் சிறப்பினை தெளிவுற மார்க்கண்டேயப் படலம் எடுத்துரைக்கிறது. தவத்தினால் பல அரிய நிகழ்வுகளும், சிறப்புக்களும் ஏற்படும் என்பதையும், தவமே முக்திக்குச் சிறந்த வழி என்பதையும் கருப்பொருளாகக் கொண்டதே இப்படலமாகும். காசிபர் தன் மகன்களான சூரபதுமன் முதலானோருக்கு தவத்தின் சிறப்பினை எடுத்துரைக்க மார்க்கண்டேயரின் வரலாற்றினைக் கூறுகிறார். வாழ்க்கையின் படிநிலைகளைக் கடந்து இறுதியான தவத்தின் சிறப்பினை இப்படலம் தெளிவுறக் கூறுகிறது.

குச்சகர் தன் மகனுக்கு மணமுடிக்க நினைத்த பெண்ணான விருத்தை திடீரென இறந்ததால், தன்னுடைய தவச்சிறப்பினால் மீண்டும் அவளை உயிர்ப்பிக்கிறார். மேலும் அவள் இறப்பிற்குக் காரணமாயிருந்த யானையின் முற்பிறவியை அறிந்துகொண்டு அந்த யானையை தேவனாக்கி வானுலகம் அடையச் செய்கிறார். அவரின் தவச்சிறப்பை,

ஆதலின் குச்சகன் அருந்த வத்திலோர்

மா(து)உயிர் அளித்தனன் மால்க ளிற்றினைக்

காதுகை நீக்கிஒண் கடவு ளாக்கியே

மேதகு விண்ணிடை மேவச் செய்தனன்

என்னும் பாடலினால் அறியலாம் (Sanmugasundaram, 2019). மார்க்கண்டேயர் தப்ப முடியாத ஊழ்வினையை, தன் தவத்தின் மூலமாக மாற்றமடையச் செய்கிறார். இறைவனின் அருளால் இயமனை வென்றதோடு மட்டுமின்றி இறப்பில்லாத வீடுபேற்றினை அடைந்ததை,

அப்பெருந் திருமகன் ஆற்றும் நோன்பினால்

தப்பரும் விதியினைத் தணந்து கூற்றுவன்

துப்பினை அகற்றியே தொலைவு கண்டுபின்

எப்பொழு தத்தினும் இறப்(பு)இன் றாயினான்

என்னும் பாடல் விளக்குகிறது (Sanmugasundaram, 2019). தவமே ஒரு மனிதனை செம்மையுறச் செய்து வீடுபேறினை அளித்திடும் என்பதை இச்செய்திகளால் அறிய இயலும்.

## முடிவுரை

மனிதனானவன் தன் வாழ்வின் கடமைகளை அறிந்து அவற்றை சரியான வழிமுறையில் கடைபிடித்து வாழ்வதே சிறப்பைத் தரும் என்பதையும், இல்லற துறவற நெறிகளின் மாண்புகளையும் எடுத்துரைப்பதாக கந்தபுராணத்தில் அமைந்துள்ள மார்க்கண்டேயப் படலம் அமைந்துள்ளது. மனிதனின் கடமைகள் நான்காகும். அவை - பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம். இந்நான்கு கடமைகளும் அந்தணர்களின் ஆச்சிரம நெறிகளாக கந்தபுராணத்தின் வழி அறியப்படுகின்றன. இல்லற நெறியினை சிறப்பான முறையில் மேற்கொண்ட பிறகே துறவற நெறியினை மேற்கொள்ள வேண்டும். தவத்தின் ஊற்றுக்கண்ணான துறவறத்தை மேற்கொண்டு முக்தி என்னும் வீடுபேற்றினை அடைய வேண்டும் என மார்க்கண்டேயப் படலம் அந்தணர்களின் வாழ்க்கைக் கூறுகளை எடுத்துரைக்கிறது.

## References

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Sanmugasundaram, S.K.M., (2019) Kandhapuranam moolamum uraiyum (Part-2), Paari Nilayam, Chennai, India.

Subramaniyan, S.V., (2007) Pathinen Keezhkanakku noolgal moolam muzhuvathum kurippu vilakkangaludan, Meiyappan Pathipagam, Chidambaram, India.

Subramanyan, N., (1986) Sangakaala Vazhviyal- Sanga thamizharin arasu muraiyum samuga vazhvum, New Century Book house Pvt Ltd, Chennai, India.

Thirugnanasambandam, S., (2010) Agapporul Vilakkam thurai vilakangaludan, Kathir pathipagam, Thituvaiyaru, India.

Thirugnanasambandam, S., (2018) Tholkappiyam- Porulathigaram moolamum uraiyum, Kathir pathipagam, Thituvaiyaru, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author (s)2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License